# நடைபாதையில் வியாபாரம் - பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர், டிச. 28-

பாசார் போரோங், பூசாட் பண்டார் உத்தாரா, கோலாலம்பூரில் லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்தவர்கள் மீது கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று நடவடிக்கை எடுத்தது. அனுமதி இல்லாமல் அந்த இடங்களில் அந்நியர்கள் வியாபாரம் செய்தது தெரிய வந்தது.

பொதுமக்கள் நடைபாதைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது முகநூல் பதிவில் வெளியிட்ட அறிக்கையில் கூறியது.

சட்டவிரோதமாக வியாபாரம் செய்தவர்களுக்கு எதிராக நான்கு அபராத நோட்டீஸுகளும் வெளியிடப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் ஜாலான் லொம்போங், தாமான் மிஹார்ஜா செராஸ் கோலாலம்பூரில் உள்ள டிபிகேஎல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன. அடையாளம் காணப்படும் பகுதிகளில் டிபிகேஎல் தொடர் கண்காணிப்புகளை மேற்கொளாள்ளும் என்று அந்த அறிக்கை தெரிவித்தது.